# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1839) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச]  யாழ்ப்பாணம்:-  நந்தன ஹு ஐப்பசி மீ கக உ செவ்வாய்க்கிழமை (4 Nov. 1952)  [இல - ருகூ]


திருத்தொண்டர் திருநாள்

## அடியார் அமுதுக்கு அரச நெல் நிதி அவித்தவர்

### இடங்கழி நாயனார்

கோனாட்டிலே கொடும்பாளூரிலே ஆதித்தன் குடியிலே திருவவதாரஞ் செய்து இராச்சிய பரிபாலனஞ் செய்தார் இடங்கழிநாயனார். அவர் சிவபெருமானுடைய திருவடித் தொண்டேயன்றிப் பிறிதொன்றுஞ் சிந்தியாதவராய்ச் சிவனடியார் வேண்டியவெல்லாம் பெரு விருப்பினாற் செய்து வந்தார்.

"இடங்கழியார் எனவுலகில்
ஏறுபெரு நாமத்தார்
அடங்கலர்ழப் புாமெரித்தார்
அடித்தொண்டின் நெறியன்றி
முடங்குநெறி கனவினிலும்
முன்னுதார் எந்நாளும்
தொடர்ந்தபெருங் காதலினால்
தொண்டர்வேண்டியசெய்வார்"

இவர் இத்தகையராம் வைதிகநெறி சைவநெறி தழைக்குமாறு திருக்கோயில்களிலே நித்திய நைமித்திகங்கள் விதிப்படி நடக்க அரசியற்றுங்காலத்திலே சிவனடியாருக்குத் திருவமுதளிக்கும் ஓரடியவர் ஒரு நாள் திருவமுதாக்குதற்குப் பொருளில்லாது அத்திருத் தொண்டில் மிகுந்த காதலினாலே வழியொன்றுமறியாராய் அரசனுடைய பண்டாரத்திட்புகுந்து நெல்லெடுத்தார். காவலர் கண்டு அவரைப் பிடித்து அரசன்முன் கொண்டு வந்தார்கள்.

அவ்வாறு ஏன் செய்தாரென்று அரசன் அடியாரை வினவ, சிவனடியாரைத் திருவமுது செய்வித்தற்குப் பொருளின்றி யிவ்வாறு செய்தேனென்றார். அதைக் கேட்ட அரசன் மிக இரங்கி இவரன்றோ எனது பண்டாரமென்று கூறினார்.

"மெய்த்தவரைக் கண்டிருக்கும்
வேல்மன்னர் வினவுதலும்
'அத்தனடி யாரையான்
அமுதுசெய்விப் பதுமுட்ட
இத்தகைமை செய்தேன்' என
றியம்புதலும் மிகஇரங்கிப்
பத்தரைவிட்(டு) 'இவரன்றே
பண்டாரம் எனக்(கு) எனபார்"

இவ்வாறு கூறித் தனது நெற் பண்டாரத்தை மாத்திரமன்றி நிதிப் பண்டாரத்தையும் சிவனடியார் கொள்ளுமாறு பறையறைவித்தார்.

"நிறையழிந்த உள்ளத்தால்
'நெற்பண்டா ரமும்அன்றிக்
குறைவில்நிதிப் பண்டார
மானஎல்லாங்கொள்ளைமுகந்(து)
இறைவனடி யார்கவர்ந்து
கொள்க' என எம்மருங்கும்
பறையறையப் பண்ணுவித்தார்
படைத்தநிதிப்பயன்கொள்வார்"

பண்டாரங்களி லுள்ளவற்றைச் சிவனடியார் சென்றெடுக்கச் சிந்தையில் அன்புடையராய்த் திருநீற்றின் நெறி தழைக்குமாறு பல்லாண்டு அரசாண்டு சிவபெருமானுடைய திருவடி நீழலையடைந்தார்.

"எண்ணில்பெரும் பண்டாரம்
ஈசனடி யார்கொள்ள
உண்ணிறைந்த அன்பினால்
உறுகொள்ளை மிகஊட்டித்
தண்ணளியால் நெடுங்காலந்
திருநீற்றின் நெறிதழைப்ப
மண்ணிலருள் புரிந்திறைவர்
மலரடியின் நிழல்சேர்ந்தார்"

## அன்பளிப்புச் செய்யவேண்டாம்!

### பண்டித நேரு அவர்களின் வேண்டுகோள்

அன்பர்கள், அறிந்தோர் அறியாதோர் யாவரும் எனது பிறந்த நாளிலே அன்பளிப்புகள் அனுப்புதல் வழக்கமாய் விட்டது. இவற்றுக்குக் காரணமாயிருக்கும் அன்பு மதிப்பற்ற மாண்புடையது. ஆனால் எனது மனநிலையைக் குழப்புவதுமாயிருக்கின்றது.

ஆகையினாலே பிறந்த நாளிலோ மற்றெந்த நாளிலோ யாரயினும் எனக்கு அன்பளிப்புச் செய்யவேண்டாமென்று பண்டித நேரு அவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்!

உ

### தாயிலாகிய இன்னருள்புரிந்தவென் தலைவன்!

திருச்சிற்றம்பலம்.

ஓய்வி லாதன வுவமனி லிறந்தன வொண்மலர்த் தாள்தந்து,
நாயிலாகிய குலத்தினுங் கடைப்படு மென்னைநன் னெறிகாட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்தவென் தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே.

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அரங்கு

## பசிப் பிணியைப் பற்றி பரிதாபம் இல்லை?

### அரசாங்க வட்டார உரைகளும் விபரீதங்களும்

சீனந் தந்த அரிசி சிவப்பானால் என்ன உவப்பானால் என்ன சீவியத்துக்கு வேண்டியதே. அந்தக் கவலை இப்பொழுது அரசியற்கட்சி ஆரவாரமாய் மாறிவிட்டது.

சீன - இலங்கை வர்த்தக ஒப்பந்தம் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் மன அமைதியின்மையை ஆக்கிவிட்டதா? என்று என்ற ஆராய்ச்சியிற் கொழும்புத் தினசரிகள் (ஆங்கிலம்) இரண்டு தீவிரமாக உழைக்கின்றன.

இப்பொழுது இந்த உப்புப் பளியற்ற விவாதத்திற் காட்டும் அபிமானத்தை இத் தினசரிகள் ஏழைகளின் இன்னல்களைத் தவிர்க்கும் ... ஆய்வதிற் ... வந்தால் நாடு நன்மையடையுமல்லவா?

பள்ளிச் சிறார்கள் வேடிக்கைக்குச் சண்டை போட்டுவிட்டு ஒருவருக்கொருவர் கோபங்காட்டி புத்தகம் கரும்பலகை கொடுத்துதவ மறுப்பார்போல வர்த்தகத்திலும் கட்சி கட்டி இதுபொதுவுடைமைநாடு இது சனநாயகநாடு என்று எல்லையிட்டு வரையறுக்கப்பட்ட வியாபாரம் நடத்துவதே அரசியற் கொள்கையானால் யுத்தம் அல்ல .... ...

## இலக்கிய வரம்பை இன்னே அமைக்க வேண்டும்

### சொல் ஏர் உழவரின் தூய கடமை இதுவே

மெய்யான இலக்கியம் எது, போலி இலக்கியம் எது என்ற ஆராய்ச்சி அத்தியாவசியமானது. இவ்வாராய்ச்சி தமிழிற் சிந்திப்போர் உள்ளத்திற் பெரும் வேதனையைத் தருகின்றது. பல நூற்றாண்டுகளாக 'இன்பம்' தந்து வந்த இலக்கியங்களைக் குற்றங்கூற யாருக்குத்தான் மனம்வரும்? மெய்யான அளவுகோலிட்டு அளந்தால் போலி இலக்கிய வணிகரின் சூதான அளவுகோலின் பொய்மை வெளியாகிவிடவே அவர் சீறுதல் மெய் அளவுகோலைத் தீயிடல், இயல்பே. ஆனால் வாழ்வின் குறிக்கோள் தவறியதால் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் குழம்பந் தோன்றும் இந்நாளில் நெல்மணியிலிருந்து பதரை நீக்குதல் இன்றியமையாததாகின்றது. கூடையில் முன்னோர் கட்டிவைத்தநெல் என்று பதரை நீக்காது உண்ணல் அறிவுடைமையாகுமா?

இயற்கையின் உற்பாதங்களாலும் மனிதரின் பூசல்களாலும் காலந்தோறும் இலக்கியம் அடிதலை தடுமாறி வந்திருக்கின்றது. அறிஞர் சிலர் நல்லன தேர்ந்து, அல்லன நீக்க முயன்றுள்ளனர். சங்க இலக்கியமும் சமண பௌத்த இலக்கியமும் ஒன்று கலந்துவிடவே பேரறிஞர் சிலர் மெய் நூல்களை யாத்தனர். பின்னுஞ் சில நூற்றாண்டுகள்கழிய வித்தகம் மதிக்கப்பட்டகாலில் எல்லாம் இலக்கியங்களே எனக்கருதி உரையாசிரியர்கள் பலர் கண்ட நூல்களுக்கெல்லாம் உரை வகுத்தனர் போலும். இந்நாளிலும் சுதேச கலாசாரப்பற்று ஓர் நாகரிகச் சின்னமெனக் கருதப்படும்போது, தமிழ் எழுத்தில் எழுதப்படுவன எல்லாம் இலக்கியங்களே எனப் பலாலும் கொள்ளப்படுகின்றன. புங்கம் வேருக்கும் நரியின் காலுக்கும் வேற்றுமை அறியாத முதலைகள் பல நம் சமூகத்தில் உலாவுகின்றன.

"தம்பி"

இந்நிலை பிறநாட்டு இலக்கிய வரலாறுகளிலும் இருந்திருக்கின்றது. இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில், காவியம், செய்யுள், நாடகமெல்லாம் அவ்வவற்றின் வரிசையுணராதாரால் பாராட்டப்படுகையில் இந்நிலை எழுந்தது. "ஒரு புலவன் எந்த அடிப்படையில் மதிக்கப்படல் வேண்டும்?" என்று அரிஸ்ரோவேனிஸ் தம் நாடகத்திற் கேட்கின்றார்; "அவன் கலை உண்மையானது எனின், அவன் புத்திமதி அசைக்க முடியாதது எனின், அவன் மக்களினத்துக்கு நலம் தருவானாயின், மாநதரைச் சில அளவிலாயினும் சிறப்புறச் செய்தான் எனில் அவன் மதிக்கப்படத்தக்கவன் என்று மறுமொழி பகர்கின்றார்.

கவியுணர்ச்சியைப் பெருஞ் செல்வமாக உடையவரும், பெரும் புலவரின் நூல்களை நுகர்ந்து தம் வாக்கியங்களில் அன்னார் மொழிகளைப் பதித்து எழுதுபவருமாகிய பிளேற்றோ நெருங்கிய நண்பர்களை மனவருத்தத்துடன் நீக்கினாற்போல, அவர்கள் நூல்களை ஏற்றுக்கொள்ளாததுமன்றி மிகத் தாழ்ந்த படியிலேயே வைத்து மதிக்கிறார். அழகுணர்ச்சியிலும் உண்மையுணர்வே இலக்கியத்துக்கு அவசியமென்பது அவர் கருத்து. அவரது "அரசியல்" என்ற சிந்தனைக் களஞ்சியத்தில் பத்தாம் பாகத்தில், "நான் பாலப் பருவத்திலிருந்து (கிரேக்க நாட்டுக் காவிய கர்த்தாவான) ஹோமர் மேல பெருங் காதலும் மதிப்பும் வைத்திருந்தேன், அவை என்னைத் தடுக்கின்றன. அழகிய துன்பியற் புலவர்களின் வழிகாட்டியும் தலைவரும் அவரே. ஆனால், உண்மையைக் கைவிட்டு ஒரு தனி மனிதரை மதிக்கலாகாது; ஆகவே நான் வெளிப்படையாகப் பேச வேண்டும்" என்று தொடங்கி அப் புலவர்களின் குறைகளை அலசி ஆராய்கின்றார். அவர் போன்ற கலைஞர்கள் நாட்டை விட்டுக் கலைக்கப்படல் வேண்டும் என முடிவு கட்டுகின்றார். (வெ. சாமிநாத சர்மாவின் மொழிபெயர்ப்பு நூலில் காண்க).

இன்று தமிழ்பேசும் மக்களிடையே ஒருவர் பிளேற்றோவின் பணியைச் செய்தல் மிக மிக அவசியம். தேய்ந்து தரைமட்டமாகி வரம்புகள் அடையாளமற்றுப் போகுமுன், அவற்றைச் செவ்வனே திருத்திக் கட்டி, இலக்கியமென்றால் எல்லையற்ற காடு அன்று எனக்காட்டல் அத்தியாவசியம். 'வரப்புயர' என்ற ஔவை வாக்கைப் பின்பற்றிச் சொல்லேருழவ

தொடர்ச்சி ௪-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ ஐப்பசிமூ கக உ செவ்வாய்க்கிழமை

## ஒழுக்க நெறிப் புனர் உத்தாரணம்!

இறங்கு மதி என்ன இன்றைய உலகம் சென்று தேய்ந் திறுதல் வழியிற் போய்க்கொண்டிருக்கின்றதென்பதே அறிஞர்களின் அபிப்பிராயம். இவ்விதமாகக் கீழ்நிலை வந்தெய்துவதை எவ் வி த த் தி லும் தடை செய்து விடவேண்டுமென்று மதிநுட்பமிக்கோர் இரவு பகலயரா துழைத்து வருகின்றனர். ஒழுக்க நெறி உருத் தெரியாது மறைந்து வருகின்றது என்று இப் பெரியார்கள் பல நாளாராய்ச்சியிற் கண்டிருக்கிறார்கள். இதன் பயனுகவே ஞாலமெங்கணும் ஒழுக்க நெறியைப் புனர் உத்தாரணம் செய்யவேண்டுமென்று கழகங்கள் ஆங்காங்கே கூடி ஆலோசிக்கின்றன.

இத்தகைய மகாநாடொன்று எங்கள் தீபகத்திலும் கூடியது. வழமைபோலச் சொற்பெருக்குப் பெருவெள்ளமாகக் கரை புரண்டோடியிருக்கின்றது. சொன்னதைச் சொல்லுமாம் கிள்ளை என்றுங்கு; 'ஒழுக்கம் வேண்டும் .... ஒழுக்கம் வேண்டும்' என்று ஒருகால், இருகாற், பலகால் உரைத்துவிட்டால் உலகில் ஒழுக்கம் ஓங்கப் போவதலல! அன்றி ஒழுக்கக் குறைவு நின்றுவிடுவதுவுமல்ல. மகாநாடுகள் கூடுவதும் குலைவதும் பேசுவதும் பிரிவதும் ஆகவே இருந்துவருகின்றன. ஒழுக்கம் இதுதான் என்று உலகம் அறியாமல் இருந்தால் அதை எடுத்துச் சொல்லவேண்டும். ஒழுக்க நெறி கடைப்பிடிக்கின்றார்களா என்பதுதான் ஆராயப்படவேண்டியது.

தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும் என்று முதுமொழி பிறந்தது ஒழுக்க நெறியை இளம் உள்ளத்திற் பதியச் செய்ய வேண்டியதின் அவசியத்தை அறிவுறுத்தற் பொருட்டே. ஆரம்பக் கல்விக் கழகங்களில் ஒழுக்க நெறி எவ்வாறு புகட்டப்படுகின்றதெனபதை எவருஞ் சிந்தித்ததே கிடையாது! சமயக்கல்வி ஊட்டப் படுகின்றதா எவ்வாறு கற்பிக்கப் படுகின்றது என்றெல்லாம் சமய பரிபாலனசங்கங்கள் பரிசீலனை செய்வதாகத் தெரியவில்லை. பாட புத்தகங்களிலே ஒழுக்க நெறியை எடுத்துக் காட்டுவது மாத்திரமன்று; நாளாந்த வாழ்க்கையில்ஒழுக்கமுறையாகநடந்துகொள்ளவேண்டிய கடமையையும் உணர்த்துவதற்கெடுத்துக்காட்டான நன்னெறி வாழ்க்கையை ஆசிரியர்கள்சமயபோதகர்கள் பிரசாரகர்கள் சமூகத் தொண்டர்கள் வாழ்ந்து காட்ட வேண்டும். ஆகவே சமயக் கல்வியே மூலகாரியமான தேவை என்பது போதருகின்றது. இக்கல்வி பாடவிதானத்தில் அமைக்கப்பெற்ற அளவில் ஓர் புத்தகப் பாடமாயிருக்கும் வரையும் ஒழுக்கநெறியைச் சிறார்கள் மேற்கொள்ள மாட்டார்கள். சமயகுரவர்கள் - நாயன்மார்கள் - மேதாவிகள் இவர்களின் திருநாட்களில் இன்னாரின் வாழ்க்கை வரலாற்றில் ஒழுக்க நெறியை எடுத்துக்காட்டுவனவற்றை விரித் துரைத்து அவ்வழி நின்ற அப்பெரியார்கள் அரனடி அடைந்த பெருமையையும் விளக்கி இன்னிசைத் தேவார பாராயணத்தோடு இன்னமுதும் உதவி தண்ணிய கனியினுட் பொதித்து மருந்துதவுவதுபோலப் பச்சிளம் பாலர்களின் உள்ளத்திற் பசுமரத்தாணி அறைந்தாற்போல வாழ்நாள் முழுவதும் மறவாதிருக்க நல வழி காட்டல் வேண்டும்.

ஒழுக்கநெறியாளர் மகாநாட்டார் அண்மையில் நடந்த திருக்குறள் விழா வைபவத்திற் கலந்திருந்தால் தாங்கள் விரும்பிய வாழ்க்கை வழியை வகுத்துக்காட்டும் தததுவம் வாய்ந்த ஒழுக்க நெறிக் களஞ்சியம் ஒன்று தமிழர்களுக்குண்டு என்பதை அறிந்திருப்பார்கள். நிதி இருந்தென்ன? அதை எடுத்தனுபவிக்கும் விதியும் வேண்டுமல்லவா?

ஒழுக்க நெறியை உலகிற் பரப்ப வேண்டியவர்கள் ஊரெங்கணுஞ் சென்று காந்திப் பெரியார் வாழ்ந்தாங்கு வாழ்ந்து காட்டிவைப்பதே அன்றி மேடைமீது நின்று மின்னல்வேகப் பேச்சு நிகழ்த்துவதிற் பயனில்லை என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### தந்தை யார்?
### பத்திரிகைகளின் ஆராய்ச்சி

சோமாவதியின் வாழ்க்கை சீரடைந்து விட்டது. இதற்குப் பத்திரிகைகளே காரணம் என்றெல்லாம் செய்திகள வெளிவந்தன.

ஆனால் அது அவ்வளவில் நிற்கவில்லை. உண்மையும வெளியாகி விட்டது போலும்.

சோமவதி என்ற நாமம் தோன்றி மறைந்து திரும்பவும் கரை சேர்கலைக் குறிக்கின்றது போலும்!

இரண்டாவது சோமாவதி தோற்றியிருக்கிறார். இத் தோற்றத்துக்கு ஏற்ற ஆதாரமும் உண்டு.

தந்தை தத்தளிக்கின்றார். யார் புத்திரி என்று திட்டவட்டமாகத் தீர்ப்பளிக்கக் காலம கனிகழிந்து விட்டதே!

எனினும் பெற்றரிட மிருந்து பிரிந்த பெண்கள் இருவர் இனியாவது உற்றவிடத்திற் சேரமுடியும் என்பதே முடிபு.

### நெல்லினுட் பதர்

யாழ்ப்பாணத்துக்கு இப்பொழுது சில நாட்களாக உதவப்பெற்ற நெல்லிற் பெரும் பாலும் பதர் இருப்பதாகப் பொதுசனங்கள் குறை கூறுகின்றனர்.

நெலலினுள் மாத்திரமன்று சீனத்துடன் செய்துகொண்ட அரிசிப் பேச்சுகளிலும் சப்பி ஏராளமாக விருக்கின்றதே. இதைக் கொழும்பு தினசரிகள் (ஆக்கிலம) இப் பொழுது தூற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

### மந்திரிகள் மந்திரவாதிகளா?

மானிப்பாய் மின்சார வெளிச்சத் திட்டத்தை உத்தியோக முறையிலே ஆரம்பித்து வைக்கும பொழுது உள்நாட்டு கிராமக மந்திரியார் திரு C W W. கன்னங்கரா மந்திரிகள் மந்திரவாதிகள் அல்லர் என்று குறிப்பிட்டார். அது உண்மையே! கட்சிக்காரர் மந்திரவித்தையால் வாக்காளர்களின் கண்களைக் கட்டித தோற்றுவித்த பிரதிநிதிகளென்னும் மாயமாஞ்செடிகளிற் பிரதானமானவையே மந்திரிகள்என்றுவாழ்க்கை வானில் ரேன்றிப்பதாக வளர்மதி கண்டிருக்கின்றது.

# திசைதொறும் திகழும் திருக்குறள்

## மகாநாட்டில் அறிஞர்கள் சொற்பெருக்கு

கொழும்பு சகிருக்கல்லூரியில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் மந்திரி திரு. சு. நடேசன் அவர்கள் திருக்குறள் மகாநாட்டைத் திறந்துவைத்தார். திரு. க. ச. அருணந்தி அவர்கள் தலைமை வகித்தார்.

டக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் "வள்ளுவன் புலமை" என்னும் விஷயத்திற் பேசும் பொழுது திருக்குறளிற் காணவரும் சொல்நயமும பொருள் நயமும் எக்காலத்திலும யாராலும மாற்ற முடியாத தனைமயவாய் விளங்குகின்றன. திருக்குறளிலுள்ள சொற்களுக்குப் பதிலாய் வேறு சொறகளை அவற்றின் இடங்களில் எடுத்தாளமுடியாதென்று கூறினார்.

சித்தாந்த கலாநிதி வித்துவான் திரு. ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் 'வள்ளுவன் கண்ட தமிழகம்" என்னும் பொருளிற் பேசும்பொழுது திருக்குறள் தமிழ்மக்களின் வாழ்க்கை முறையை வகுத்துக் கூறும் சட்ட நூலாயிருக்கின்றது. பண்டைக்காலத் தமிழகத்தின் தன்மையைத் திருக்குறளிலிருந்து அறியலாம் என்று கூறினர்.

"அறம்" என்னும் பொருளை எடுத்து விளக்கும்பொழுது மனித வாழ்க்கையின் நோக்கம் இன்பம் பெறவதே. இன்பம் பெறுதற்குப் பொருள் துணையாயிருக்கின்றது. இவை இரண்டையும் பெறுதற்கு அறம் வேண்டும். இந்த அறம தூய மனத்துடன் செய்தல் வேண்டும. என்று திருவள்ளுவர் உரைத்தருளினர் என்று கூறினர்.

திரு. க அன்பழகன் அவர்கள் "பொருள்" என்பதைப் பீடிகையாகக்கொண்டு பேசும் பொழுது வாழ்க்கையில் வேண்டுவனவற்றைப் பொருட்பாலிலே திருவள்ளுவர் வரையறுத்து வகுத்தாரென்றும் அறநெறி குன்றாது நிலைத்து வளரும்பொருட்டு அவர் அவ்வாறு வகுத்தருளினர் என்றும் கூறினர்.

ஸ்ரீமதி K. திருநாவுக்கரசு பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், ஜனப் S. M, கமால்தீன், ஸ்ரீமதி இ. இரத்தினம் முதலிய ஈழத்து அறிஞர்களும் சொற்பொழிவுகள் ஆற்றினா.

## அணிந்துரை அரங்கம்

### இந்து இளைஞன்

கவின்பெற அமைக்கப் பெற்ற அறிவுரைகள் சாலப் பொருந்திய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களின் வெளியீடாகிய இந்து இளைஞன் நல்மதிப்பைப் பெறுகின்றது. தாய் மொழிகள் அரசவரிசை அடையும் அமையத்தில் மாணவர்கள் செந்தமிழ் நடையிற் கைதேர்ந்தவர்களாகும் ஆற்றலை இவ் வெளியீடு நன்கு புலப்படுத்துகின்றது. சித்திரச் சிறப்பு மிகப் பொருத்தமாயுள்ளது. வழமைபோல வனப்புமிக்கது.

இதன் ஆசிரியர்:
திரு. M. M. H. அப்துல் குத்தூஸ்.

# சமய நூல்களைக் கற்று அமைக!

## யோகிகளின் ஒழுக்கநெறிக் கற்பனை

### பதுளை சைவபரிபாலனசங்கம்

பதுளை சைவபரிபாலன சங்கத்திற்பேசும்பொழுது அன்பு நெறியைச் சைவ மக்கள் உலகிற் பரப்பவேண்டும்! இஃதே என்பணி இஃது வெறறியடைதற்கு உங்கள உதவி இன்றியமையாது என்று கூறினர்.

### பண்டாரவளை

பண்டாரவளையிற்பேசும்பொழுது மக்கள் தங்கள் சமய நூல்களைக் கற்க வேண்டும். தியானத்தின்மூலம் அமைதி உண்டாக்க வேண்டுமென்றார்.

### நுரலை

நுரலையிற் பேசும்பொழுது சாந்தியடைதற்குத் தியானம் இன்றியமையாதது. எல்லாச் சமயங்களும் அன்பையே போதிக்கின்றன என்று கூறினார்.

### கொட்டகலையில்

கொட்டகலை மக்களுக்குக் கொடுத்த அறிவுரையில் ஆடு கோழி பலியிடுதலை ஒழியுங்கள! காலையிலே கடமை செய்யப் போகும் பொழுது கடவுளை வணங்கிச் செல்லுங்கள். அவர் எங்கள் உள்ளங்களிலே இருக்கிறார் என்று கூறினர்.

டிம்புல வாசிகளுக்கீந்த நல்லுரைகளில் சிக்கனவு வாழ்க்கையைக் கடைப்பிடியுங்கள். சிங்கள மக்களுடன் ஒற்றுமையாயிருங்கள. சாதி சமயங்களால பிரிவையுண்டாக்காதீர்கள. குடிவகை சுருட்டு முதலிய துர்ப்பழக்கங்களை நீக்குங்கள். என்று கூறினர்.

### நாவலப்பிட்டியில்

நாவலப்பிட்டி மக்களின் வரவேற்பு வாசிக்கப்பெற்றபின் கடவுள் ஒருவரே. இதில் வாதம் பிரதிவாதங்களுக்கிடமில்லை. சாதி மத பேதமற்ற சமுதாய வாழ்க்கை முறை அமைக்க வேணடும. விஞ்ஞானிகள் மனதை அகத்தே திருப்பி ஆன்மார்த்த வாழ்க்கையிற் செலுத்த வேண்டும் என்று சுவாமிகள் கூறினர்.

## தானவரவு

நிகழும் நந்தன ஆவணி 28 உ வெள்ளிக்கிழமை (12-9 52) வண்ணார்பண்ணை திரு. முருகேசு கந்தையா அவர்கள் மகன் திரு. க. சின்னத்துரை, மகள் திருமதி செ. பராசக்தி ஆகியவர்கள் மருங்கே வருநதி நிற்பத் தேகவியோகமாயினர். அவரது அந்தியேட்டிக்கிரியைகள் புரட்டாதிமீ 25உ (12-10-52) முறைப்படி வில்லூன்றியிற் செய்யப்பெற்றன. இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 5 பெற்றும்.

அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலித் தமிழ் இசைக் கலைஞர்கள்

## இந்தியப் பேராசிரியர்கள் வகுத்த திர அமைப்பு

தமிழ் இசை ஒலிபரப்பில் பங்குபற்றும் வானொலி கலைஞர்கள் அனைவரையும், பரிசோதித்து தரம் வகுப்பதற்காகத் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆர் ஸ்ரீநிவாஸன் அவர்களை ரேடியோ சிலோன் வரவழைத்தது. இவர் ஒரு சமயத்தில் திருவனந்தபுரம் ஒலிபரப்பு நிலையத்தின் நிலைய அதிபதியாக விளங்கியவர். அன்றியும் இவர் கர்நாடக சங்கீதத்தில் மிகவும் ஞானமுள்ளவர்.

இந்த இசைப் பரிசோதனைக்காக 356 பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. ஆனால் 310 பேர் மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டார்கள். 46 பேர், பரிசோதனைக்கு உடன்பட்டபோதிலும், அவர்களுக்கெனக் குறிப்பிடப்பட்ட திகதியில் வரத்தவறிவிட்டார்கள். ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட கலைஞர்களது இடாப்பில் உள்ளவர்களில் 10 பேர், சுகவீனம் முதலிய காரணங்களினால் இசைப் பரிசோதனையில் பங்குபற்றவில்லை. 4 பேர், இந்த இசைப் பரிசோதனையில் அக்கறை கொண்டவர்களாகவே தோன்றவில்லை.

28-7-52 -க்கும் 29-8-52 -க்கும் இடையில் 3.0 பேரும் பரிசோதனை செய்யப்பட்டனர்.

### இசைப் பரிசோதனையின் முடிவு பின்வருமாறு:

| இனம் | விண்ணப்பித்தோர் தொகை | பரிசோதனைக்கு வந்தவர்கள் | தேறியவர்கள் தொகை |
|---|---|---|---|
| வாய்ப்பாட்டு | 128 | 110 | 54 |
| வயலின் | 41 | 39 | 17 |
| வீணை | 23 | 19 | 11 |
| புல்லாங்குழல் | 14 | 11 | 5 |
| நாதசுரம் | 32 | 27 | 17 |
| கிளாரினெட் | 1 | 1 | 1 |
| ஜலதரங்கம் | 1 | 1 | 1 |
| கோட்டுவாத்தியம் | 1 | 1 | 1 |
| தோத்திரப்பாடல் | 35 | 32 | 13 |
| கிறிஸ்தவகீதம் | 25 | 20 | 5 |
| கதாகாலக்ஷேபம் | 6 | 6 | 5 |
| வயலின (ப - வா) | 17 | 17 | 8 |
| மிருதங்கம் | 12 | 12 | 7 |
| கஞ்சிரா | 5 | 5 | 4 |
| கடம் | 4 | 4 | 3 |
| வாத்-கோஷ்டித்தலை- | 7 | 3 | 3 |
| வாத்தியக்கோஷ்டி | 1 | 1 | 1 |

பேராசிரியர் ஸ்ரீநிவாஸன் அவர்கள் தமது அறிக்கையில் எடுத்துக் காட்டியனவும், தமிழ் ஆலோசனைச் சபையில்பிரசன்னமாயிருந்தபோது எடுத்துக் கூறியனவும் ஆகிய சில குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

வாய்ப் பாட்டு: குறைந்த தரத்தில் உள்ள கலைஞர்களிடம், பொதுவாக அபிவிருத்தி காணப்படுகிறது. உயர் தரத்தில் உள்ளவர்களிடத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்படவில்லை. அவர்களது பொய்த்திருப்தியே இதற்குக் காரணமாயிருக்கலாம். பல இளம் பாடகர்கள், பல்லவிராகம் ஆலாபனம், சுரம் முதலியவற்றைப் பாடுவதன் மூலம் தங்கள் திறமையைக் காட்ட முயன்றனர். ஆனால் அம்முயற்சி பலனளிக்கவில்லை. இவர்களில் சிலருக்கு வெகு சொற்பமான பாடல்களே தெரிந்திருந்தன. மிகச் சாதாரணமான, பிரபலமான சில இராகங்களில் உள்ள பாடல்களைத் தானும் இவர்கள் அறிந்திருக்கவில்லை. சங்கீதக் கலையில மிகத் தேர்ச்சிவாய்ந்தவர்கள் கூட மிக எச்சரிக்கையாக இருக்கிற அம்சங்களில், இந்த இளம் பாடகர்கள் துணிந்து தங்கள் கைவரிசையைக் காட்ட முற்பட்டார்கள்.

வானொலியில் பொதுவாக வாய்ப் பாட்டுக்குக் கொடுக்கப்படுவது அரை மணி நேரம். அந்த நேரத்தில் பல்லவியையோ, பெரிய சாஸ்திரீய கீதங்களையோ பாட நினைப்பது வீண். இத் துறையில் நன்கு கைதேர்ந்தவர்கள் மட்டுமே பிரவேசிக்க வேண்டும்.

ஒரு அரை மணிநேர நிகழ்ச்சியில் சிறிய உருப்படிகளை கர்சிதமாகப் பாடுவதுடன் நின்றுவிடுவது விரும்பத்தக்கது. தமது சுர ஞானத்தை வெளிப்படுத்த விரும்புவோர், சுருக்கமாக, இரண்டோரிடத்தில் சுரம் பாடலாம். வானொலியில் பாட விரும்புகிறவர்கள், வர்ணம், கீர்த்தனம், ஜாவளி, தில்லானா என்பவற்றில் நிறையப் படித்து வைத்துக்கொள்வது சிறந்தது. சாஸ்திரீய சங்கீதத்தைத் தானும் இலகுவான ரீதியில் கையாளுவதையே பெரும்பாலான வானொலி சுவைப்போர் வரவேற்கிறார்கள்.

1948 - ல் சித்திரை மாதத்தில் நடாத்தப்பட்ட விசேஷ இசைப் பரிசோதனையின் போது, இதே பரிசோதகர் என்ன கூறினார் என்பதை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்கும்.

சங்கீதத்தில் ஸ்ருதி முக்கியமானது; ஆகையால் அதில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். பாடகர்கள், மூச்சைக் கட்டுப்படுத்துவதில் பயிற்சி அடைவது நல்லது. வாயை மூடுவது போன்ற, விரும்பத்தகாத பழக்கங்களின் மூலம், இயல்பாக வெளிப்படுகிற மூச்சைத் தடை செய்வது கூடாது. வாய்ப்பாட்டு நிகழ்ச்சிக்குக் கிடைக்கக்கூடிய, ஆகக்கூடிய நேரம் 45 நிமிடமே ஆதலால், நிகழ்ச்சிக்குரிய பாடல்களைத் தெரிவு செய்வதில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்; உரிய நேரத்தில், எத்தனை இனங்களைச் சேர்க்க முடியுமோ அத்தனை இனங்களைச் சேர்க்க வேண்டும். நிகழ்சசி ஒரேமாதிரியானதாக இருக்கப்படாது, கிருதிகளுக்கு எல்லாப் பாடகர்களும் சுரம பாடவேண்டும், என்ற அவசியமில்லை. மிகுந்த திறமைவாய்ந்த வித்துவான்கள் கூட, இராக ஆலாபனை, சுரம்பாடுதல் என்பனவற்றைச் சில உருப்படிகளுக்கு மட்டும் கையாளுவது நல்லது. அனுபவமற்றவர்கள் எதற்காகச் சுரம் பாட முயற்சிக்கவேண்டும்? இராக ஆலாபனைகூடச் செய்யத் தெரியாத பாடகர்கள் (புதியவர்களாக இருக்கலாம்) சுரம்பாட எத்தனிப்பதை நான் அவதானித்திருக்கிறேன். அவர்கள் சுரங்களை மனனம் பண்ணி, கிளிப்பிள்ளைபோல ஒலிபரப்பியின் முன் ஒப்புவிக்கிறார்கள் என்பது வெளிப்படை. சுலபமாகவும் லட்சணமாகவும் சுரம் பாடும் பயிற்சிபெறுகின்றவரையும், ஆரம்ப பாடகர்கள் சுரம் பாடுவதில் தலையிடக்கூடாது. இராக ஆலாபனையிலும் சரி சுரம் பாடுவதிலும் சரி, இராசபாவத்தில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். இன்றேல் இராகம் சப்பென்றிருக்கும். ராக ஆலாபனைக்குத் தெரிவு செய்யப்படும் ராகங்கள், ரசிகத் தக்கவையாக (ரஞ்ஜகத்வம் அல்லது ரக்தி) இருக்க வேண்டும். பவப்பிரியா, பகுளாவரணம், ஆரிகாம்போதி, ராமப்பிரியா முதலியஇராகங்களை, விசேடமாக ஆரம்ப பாடகர்கள், கையாளாமல் விடுவது விசேடம் பொதுவாக, தேர்ந்தெடுக்கப்படும் உருப்படிகள ஒரே தன்மை யுடையனவாக இல்லாமலும், வாத்தியத்துக்கோ - குரலுக்கோ பொருத்தமானவையாகவும் இருக்க வேண்டும்.

பல பாடகர்களுக்கு, தாங்கள் பாடிய பாடல்களின் அர்த்தமே தெரியாது என்பது இசைப் பரிசோதனையின் போது விளங்கியது பாடல்களின் கருத்தையும் அவை இயற்றப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்திருப்பது பாவத்தை அதிகரிக்க உதவியாக இருக்கும். பாடகர்கள், பாடல்களின ஆர்த்தத்தைப் புரிந்துகொள்ள எத்தனிப்பது நல்லது

வீணையும் பாட்டும்: இந்த இனத்தில், பரிசோதனைக்குத் தோற்றியவர்கள் அனைவரும, மொத்தத்தில சித்தியடையவில்லையென்றே சொல்ல வேண்டும், பேராசிரியர் குறிப்பிடுவதாவது: "எல்லாக் குரலும் வீணையுடன் இணைவது சாத்தியமில்லை. இதுவரை நான் நடாத்திய மூன்று பரிசோதனைகளில், ஒன்றிலாவது குரலும் வீணையும் இணைந்ததை நான் காணவில்லை. வீணை வித்தியாசமான ஓசைகளையுடைய நுண்ணிய இசைக் கருவியென்பது பலரும் அறிந்தஉண்மை. வழக்கமாக நடப்பது என்னவென்றால், வீணையின் நாதமும் பாடுவோரது குரலும் மாறிமாறிக் கேட்பது தான்," தமது பாட்டுக்கு வீணை ஒரு பக்கவாத்தியம் மாதிரியென்று பலர் தவறாக எண்ணிவிடுகிறார்கள், இவர்களிற் பலர் தனியாக வாய்ப் பாட்டைப் பாடவோ அல்லது வீணையை வாசிக்கவோ முயல்வது நல்லது. இரண்டையும் ஒரே நேரத்தில் முயல்வதால், இரண்டிலும் தோல்வியடைகிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில், தனியாக வாய்ப்பாட்டோ அல்லது வாத்தியமோ இசைக்குமிருவர், மீண்டும் இரட்டை நிகழ்ச்சியில் பங்குபற்ற முன் வருவது வழக்கமாக இருக்கிறது. இவர்கள் ஒன்றில் தனியாகப் பங்குபற்ற வேண்டும், அல்லது கூட்டாகப் பங்குபற்ற வேண்டும்.

கிறிஸ்தவ கீதம்: இதன் தரம் மிகக் குறைந்துவிட்டது, "இது தமிழிசை என்பதன் கீழ் வருவதாகக் கருதப்படுகிறது. ஆனால் நான் இவற்றைக் கேட்ட வரையில், இவற்றிலே இசை மிகக் குறைவாகவே காணப்படுகிறது என்று அபிப்பிராயப்படுகிறேன்; இதில் 'இமிடேஷன்' அதிகமாகக் காணப்படுகிறது. அதுகூட மிகக் கீழ்த்தரமான "இமிடேஷன்" சில பாடகர்களைப் பொறுத்தவரையில், சங்கீதத்தையே உருக்குலைத்துப் பாடுவது போலத் தெரிகிறது. இதனை விசேட அம்சமாகக் கொள்வதற்கு எவ்வித காரணமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை." ஆகவே பரிசோதனைக்குத் தோற்றிய 20 பேரில் ஐந்து பேர்மட்டும் சித்தியடைந்ததில் ஆச்சரியமில்லை. மறறைய மதங்களின் தோத்திரப் பாடல்களுடன் சேர்த்து 'சமய இசை' என்ற வகையில் இதனைச் சேர்க்கவேண்டுமென்று பேராசிரியர் குறிப்புச் செய்துள்ளார்.

பக்க வாத்தியங்களைச் சேர்ப்பதனால், கிறிஸ்தவகீதங்களை, சிறிது சிறப்பிக்கக்கூடும். பொருத்தமான வாத்தியங்கள், பக்தி, இசை என்பவற்றை விருத்தி செய்ய உதவி செய்யும். மற்றைய தோத்திரப் பாடல்களுக்கும் இங்கே கூறியது பொருந்தும்.

# திருக்கேதீச்சரப் பெருமான் மீது

### தேவகர்மியன்துவட்டா செய்த தோத்திரம்.

நமஸ்தே சாம்பருத்திராய நமஸ்தே பரமாத்மநே
சேதுமத்திய நிவாசாய கேதீஸ்வா நமோ நமஹ. 1.

நமஸ்தேகிலநாதாய நமஸ்தேபய நாசக
சேது மத்திய நிவாசாய கேதீஸ்வர நமோ நமஹ. 2.

ஆதி மத்யாந்த சூன்யாய ஆதார நிலயாயச
சேது மத்திய நிவாசாய கேதீஸ்வர நமோ நமஹ. 3.

பிரம்ஹ விஷ்ணு ஸ்வரூபாய ஸிருஷ்டி சம்ரக்ஷ கேதவே
சேதுமத்திய நிவாசாய கேதீஸ்வர நமோ நமஹ. 4.

உமார்த்த திவ்விய தேகாய காருண்ய கருணாலய
சேதுமத்திய நிவாசாய கேதீஸ்வா நமோ நமஹ. 5.

நமஸ் ஸுந்தர ரூபாயஸுந்தரீ பிராண நாயக
சேது மதத்திய நிவாசாய கேதீஸ்வர நமோ நமஹ. 6.

நமஸ்தே ஜகதாதார நமஸ்ஸா ஸிஜாங்கிறணே
சேது மதத்திய நிவாசாய கேதீஸ்வர நமோ நமஹ. 7.

புத்திரம் தேஹி கிருபாம்தேஹி தேஹி ஸதபக்திமேவச
சேது மத்திய நிவாஸாய கேதீஸ்வா நமோ நமஹ. 8.

### மேலே சொல்லப்பட்ட சுலோக தோத்திரங்களின் தாற்பரியம் வருமாறு:-

1. அம்மையோடு கூடியவரே! உருத்திரராகிய உமக்கு நமஸ்காரம். பரமான்மாவாகிய உமக்கு நமஸ்காரம். சேதுமத்திய வாசியும் கேதீச்சரப் பிரபுவும் ஆகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!

2. அனைத்துக்கும் நாயகராகிய உமக்கு நமஸ்காரம். அச்சத்தை ஒழிப்பவராகிய உமக்கு நமஸ்காரம். சேதுமத்திய வாசியும் கேதீஸ்வரப் பிரபுவுமாகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!

3. ஆதிமத்யாந்தரகிதரும் ஆதாரத்திற் குறைவிடமானவரும் சேதுமத்திய வாசியும் கேதீச்சரப் பிரபுவும் ஆகிய உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம்!!

4. பிரமாவிஷ்ணு சொரூபரும் சிருஷ்டி ஸ்திதிகளுக்குக் காரணரும் சேதுமத்திய வாசியும் கேதீஸ்வரப் பிரபுவும் ஆகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!

5. அர்த்த நாரீஸ்வரரே கிருபாசமுத்திரமே சேதுமத்திய வாசியும் கேதீச்சரப் பிரபுவும ஆகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!

6. சுந்தரரூபமுடையவராகிய உமக்கு நமஸ்காரம். சுந்தரரூபமுடைய அம்மையாருக்கு நாயகராகிய உமக்கு நமஸ்காரம். சேது மத்திய வாசியும் கேதீச்சரப்பிரபுவும் ஆகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!

7. உலகத்துக்கு ஆதாரமானவரே பத்தியென்னும் பதுமத்துப்பானுவே சேதுமத்திய வாசியும் கேதீச்சரப் பிரபுவும் ஆகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!

8. புத்திரனைத் தருக; அருளைத் தருக; தேவரீர்மீது என்றும் நிலைத்திருக்கும் பக்தியைத்தருக; சேதுமத்தியவாசியும கேதீச்சரப்பிரபுவும்ஆகிய உமக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!


### குத்தகைக்கு நிலம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமானதும் நாயன்மார் கட்டு ஆசுபத்திரிக்கு அணித்தாயுள்ளதுமாகிய 22 பரப்புக்கொண்ட "வீரன்புலம்" என்னுங் காணியை 1952 ம் ஆண்டு அக்டோபர் மாசம் முதலாந் தேதி தொடக்கம் மூன்று ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்க மனுப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

ஆதனத்தைக் குத்தகைக்கு ஏற்பவர் ஒருவருடக குத்தகைப் பணத்தை உடனே கட்டவேண்டும்.

இந்துக்கல்லூரி அதிகாரச சபைக்கு ஷை குத்தகையை அங்கீகரிக்கும் அல்லது புறக்கணிக்கும்உரித்து உண்டு. குத்தகையை அதிகார சபை அங்கீகரித்தால் ஏறபவர் தனது செலவில் நொத்தாரிசு மூலம் குத்தகை உறுதி முடிப்பிக்க வேண்டும்.

நவம்பர் மாசம் 17-ந் திகதிக்கு முன மனுப்பத்திரங்கள் அனுப்ப வேண்டும்,

அ. அருளர்பலம்

கௌரவ காரியதரிசி
யா. இ. க. அ. சபை

யாழ்ப்பாணம்,
4—11—52.

M 156 4, 7. 11-11-52

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தொண்டர் நிகாள்

# அமண் வலையில் அகப்பட்டு அவனருளாற் சைவரானர்

## நின்றசீர் நெடுமாற நாயனர்

( குருபூசைத் தினம் —2-11-52 )

பாண்டி நாட்டிலே மதுராபுரியிலே அரசாண்ட கூன் பாண்டியன் என்னும் அரசன் சோழமகாராசாவுடைய புத்திரி மங்கையர்க்கரசியாரை மணஞ் செய்திருந்தார். குலச்சிறை நாயனர் அவருடைய மந்திரியாயிருந்தார்.

அவர் சமணர்களுடைய போதனையினலே சமண சமயத்தை மேற்கொண்டார். மங்கையர்க்கரசியாரும குலச்சிறை நாயனரும் மனம நொந்து திருஞானசமபந்தமூர்த்தி நாயனருடைய திருவருளை வேண்டி நின்றனர். அவர்களுடைய விருப்பின்படி நாயனர் மதுரைக்கு வந்தருளினர் அங்கே அவர் எழுந்தருளியிருந்த திருமடத்துக்குச் சமணர்கள் நெருப்பு வைத்தனர்.

அத்தீங்கு வேந்தனையே சாருமாகையால் அத்தீயின் வெப்பம் பையவே சென்று பாண்டியனை யடைகவென்று நாயனர் பாடியருளினர்.

‘வெய்ய தீங்கிது வேந்தன்மேற்
றெனும் விதிமுறையாற்
செய்யனேதிரு வாலவா
யெனுந்திருப் பதிகஞ்
சைவர்வாழ்மடத் தமணர்க
ளிட்டதீத் தழல்போய்ப்
பையவேசென்று பாண்டியற்
காகேனப் பணித்தார்”

உடனே பாண்டியன் தாங்கொணு வெப்பு நோயால் வருந்தச் சமணர்கள் தாங்கள் அறிந்தனவெல்லாம் செய்தும் அது மாருது வருத்தியது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனரும் வேண்டியவாறு நாயனர் அரசனை யடைந்து திருநீறு சாததித் திருநீற்றுப் பதிகம பாடியருளினர். வெபபு நோய் நீங்கிற்று. அடிகளுடைய பாதத்தை யடைந்து நான் உயர்ந்தேனென்ற அரசன் பேரின்பம் பொருந்தினர்.

“மீனவன் றன்மே லுள்ள
வெப்பெலாம் உடனே மாற
வானபேர் இன்பம் எய்தி
உச்சிமேல் அங்கை கூப்பி
‘மானமொன் றில்லார் முன்பு
வன்பிணி நீக்க வந்த
ஞானசம் பந்தர் பாத
நண்ணிநான் உய்ந்தேன்’
என்றன்”

திருவருளாலே கூன் நிமிர்ந்து நெடுமாற நாயனர் எனப் பெயரும பெற்றார்.

இதன் பின் வடபுலத்தாசர்களை வென்று சைவ சமயம் வளருமாறு நெடுங்காலம் அரசாண்டு சிவலோகத்தை நண்ணிச் சிவபெருமானுடைய திருவடிகளை யடைந்தார்.

‘திரைசெய்கடல் உலகின்கண்
திருநீற்றின் நெறிவிளங்க
உரைசெய்பெரும் புகழ்விளக்கி
ஓங்குநெடு மாறனர்
அரசுரிமை நெடுங்காலம்
அளித்திறைவர் அருளாலே
பரசுபெருஞ் சிவலோகத்
தின்புற்றுப் பணிந்திருந்தார்”

## வடமாகாணத் தமிழாசிரியர் சங்கம்

மத்திய சங்கீத விழா.

சென்ற சனிக்கிழமை சுண்டிக்குளி சென்ற் யோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் குறித்த விழா நடைபெற்றது.

வடமராட்சி, வலிகாமம் வடக்கு கிழக்கு, மேற்கு, யாழ்ப்பாணப் பிரிவுகளில நடைபெற்ற வட்டாரச் சங்கீத விழாக்களில் திறமை காட்டிய 15 பாடசாலைகள் பங்குபற்றிச்சிறப்பித்தன.

தலைவர், திரு. சு. நடேசன் தபால் பகுதி மந்திரி அவர்கள் டேசுகையில் ஆசிரியர்கள் இயல் இசை, நாடகம் ஆகிய முத்தமிழிற்கும் செய்யும்தொண்டைப் பாராட்டினர். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையின் நாடகத்திற்கு 1-ம் பரிசும்; நவாலி அரசினர் பாடசாலையின் நடனத்திற்கு 2-ம் பரிசும்; அலவெட்டி அருணுசல வித்தியாசாலையின் நாடகத்திற்கு 3-ம் பரிசும்; சுண்டிக்குளி ஸ்தான பாடசாலையின் பேச்சிற்கும் பெரியபுலம் மெ. மிஷன் பாடசாலையின் கோலாட்டத்திற்கும் விசேட பரிசும ஸ்ரீமதி நடேசன் அவர்களால் வழங்கப்பெற்றது.

## ஸ்ரீசுத்தானந்த அடிகளுக்கு குருநாகல் வரவேற்பு

7-11-52 வெள்ளிக்கிழமை பிறபகல் மல்லியதேவ ஆண்கள் லூரிமண்டபத்திலும் சைவ மகாசபை மண்டபத்திலும் சுவாமிகள் வரவேற்கப்பெறுவாரென்று அறியவருகின்றது.

## தேவை

அராலி ஐக்கிய பண்டசாலைக்கு மனேஜர் ஒருவர் தேவை, பிணைப் பணம் ஐந்நூறு ரூபா. அநுபவமுடையவர்கள், பயிற்சிப் பாடசாலையிற் படித்தவர்கள் விசேடமாகக் கவனிக்கப்டுவர், சம்பளம் அறுபது ரூபாவுக்குக் குறையாது தகுதிக்கேறபக் கொடுக்கப்படும். 14-11-52 க்குமுன் காரியதரிசிக்கு மனுச்செய்க.

அ. முருகேசு
காரியதரிசி

J 374 ஐக்கிய பண்டசாலை
அராலி P. O.
அராலி தெற்கு
28—10—52.

155 4-11. 7-11-52

## இலக்கிய வரம்பை இன்னே அமைக்க வேண்டும்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் இலக்கிய வரம்புகளை அமைத்தாலன்றித் தாழ்வுற்று, அறிவு வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்ட தமிழகம் உண்மையான மறுமலர்ச்சி எய்தாது. மலர்கள பருவத்துக்குத் தோன்றினும அவை பிஞ்சுதருவனவாகா; தோன்றின அன்றே வாடிவீழ்வனவாகும்.

வாழ்வு சமயம் இலக்கியம் முதலியன ஒன்றோடொன்று தொடர்புடையன அல்ல என்னும் கருத்து இககாலத்தில் நிலவி வருகிறது. ஒரு துறை யறிந்தோர் மறுதுறை அறியார். அறிந்தார் சிலர் உளரெனினும் அவர் தம் அறிவு அறைகள் தோறும் அடைக்கப்பட்டிருக்கின்றது போன்று ஒன்றையொன்று சார்ந்து நில்லாது தனித்தனி நின்று பயனின்றிக் கிடக்கின்றன. இப்பிணிநீங்கி, உலகை ஒரே பார்வையிற்கண்டு ஒன்று கூட்டல் மூலம் ஆராய்ந்து உண்மை [illegible] கின்றனர்.

நீங்கள் இளமைப் பருவத்தை யடைய
சி. எம். சாமி




உபயோகியுங்கள்

தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகராவமருந்து வேறு ஒன்றுமில்லை.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0

குருபஸ்பம் (தொய்வுக்கு)

தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அருமையானது.

24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20

மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S. I
(கியாட்லாக் இனம்)

M. 16. 25-4-52—25-10-52.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்

சுசீலாவின் காதல்

யாழ். நாரமண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆ
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை

சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான முனிமார்க்ஓடுகள் 13½, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள “நாஷனல்” வங்கியிலும் “இம்பீரியல்” வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=

தந்தி: “JEWELLERS”
போன்: 161.

விலாசம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponna. Jaffna on Tuesday November 4. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org